**ஜூன் – 4**

**"அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப் பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, யேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்." - 1பேது 1 : 7**

உங்களுடைய விசுவாசமே இப்பொழுது சோதனையிலிருக்கிறது. இப்போது இருக்கிறதை விட, அமைதியாக இருந்த நாட்களில், தயையின் சூரியன் உங்கள் மேல் பிரகாசமாக ஒளி வீசிக்கொண்டிருந்த போது, நீங்கள் அமைதியாக சத்திய அறிவின் அஸ்திபாரத்தைப் போட்டுக்கொண்டு, கிறிஸ்தவ குணத்தின் மேல் கட்டடத்தை எழுப்பிக் கொண்டிருந்தீர்கள். இப்பொழுதோ, சோதிக்கப்படுவதற்காக உலைக்களத்திலிருக்கிறீர்கள். ஆகையால், உங்களுடைய எல்லாத் தைரியத்தையும் ஒன்று திரட்டுங்கள்; உங்களுடைய பொறுமையைப் பலப்படுத்துங்கள்; சகிப்புத்தன்மையை மேற்கொள்ள தைரியமும் பலமும் ஊட்டுங்கள்; உங்கள் நம்பிக்கையை உறுதியாய் பற்றிக்கொண்டிருங்கள்; வாக்குத்தத்தங்களை நினைத்துப் பாருங்கள்; அவைகள் இன்னமும் உங்களுடையவைகளே; "மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டு விடாதிருங்கள்." அமரிக்கையும் நம்பிக்கையுமே உங்கள் பலனாயிருக்கும்! கர்த்தரை நோக்கி அமர்ந்து, அவருக்குக் காத்திரு. விசுவாசம் தன்னுடைய வெற்றியை ஆதாயப்படுத்திக் கொண்டிருக்கிறது. **- Z '95, 135 (R 1822).**

சுத்தம் செய்யப்படாத வெட்டி எடுக்கப்பட்ட நிலையிலுள்ள தங்கத்தை சோதிக்கிறவன் அக்கினி கலசத்தில் போடும் போது, அதன் அழிவை நாடாமல், அது களிம்பிலிருந்து பிரிக்கப்படுவதையும் சுத்தி செய்யப்படுவதையுமே நாடுகிறது போல, தேவன் நமக்கு அக்கினி போன்ற அனுபவங்களைக் கொடுக்கிறார். அதனால் நமது விசுவாசத்தை அழிப்பதற்காக அல்ல, ஆனால் பாவம், வஞ்சகம், தன்னையம், உலகத்தனம் ஆகிய இவைகளின் களிம்பிலிருந்து அதைப்பிரிக்கவும், எல்லா வழிகளிலும் அதை விலையேறப் பெற்றதாக்கவுமே அப்படிச் செய்கிறார். நமது கர்த்தர் வெளிப்படும் போது, அதாவது, அவருடைய எபிப்பனி காலத்தில், புகழ்ச்சிக்கும், கனத்திற்கும் மகிமைக்கும் பாத்திரமுள்ளதாக இருக்கிறதென்று வெளியரங்கமாகும். **-P '36, 78.**

**ஒத்து வாக்கியங்கள் :**-1நாளா 29:17; சங் 26:2; 81:7; மத் 13:19-22; 2தெச 1:3-5; எபி 6:13,18; யாக் 1:3,12; எபி 11 :7,17-19,25,29,30,32-39; யோபு 1; 2; எஸ்றா 8:22; மத் 8:23-27; 15:21-28; 9:28; 14:25-33.
**கோபுரவாசிப்பு : Z '12, 320 (R 5114)**

**வினாக்கள் :** இந்த வசனம் சம்பந்தமாக இந்த வாரத்தில் எனது அனுபவங்கள் எவை? எவ்வாறு சந்திக்கப்பட்டன? அவற்றின் மத்தியில் உதவியாயிருந்தது எது? இடையூறாக இருந்தது எது? அவை விளைவித்த பலன் என்ன?